www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

R-Nkl முன்மாதிரி திருப்புதல் தேர்வு – 2023

**10 - ஆம் வகுப்பு** **தமிழ்** பதிவு எண்.

காலம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 100

Namakkal district

## பகுதி - I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15 X 1 = 15

1. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன்–இக்கூற்றிலிருந்து நாம் புரிந்து கொள்வது ....................
   அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்.
   ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்.
   இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார் ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்
2. கானடை என்பதைப் பிரித்தால் பொருந்தாத தொடர் ..................
   அ) கான்+நடை–காட்டைச்சேர் ஆ) தான்+நடை–காட்டுக்கு நடத்தல்
   இ) கால்+நடை–காலால் நடத்தல் ஈ) கால்+உடை–காலால் உடைத்தல்
3. 'மாலவன் குன்றன் போனால் என்ன வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்' – மாலவன் குன்றமும் வேலவன்குன்றமும்
   அ) திருப்பதியும் திருத்தணியும் ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும் ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்
4. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ..............
   அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரை கவர்தல்
   இ) வலிமையை நிலை நாட்டல் ஈ) கோட்டையை முற்றுகையிடல்
5. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர்– இத்தொடருக்கான வினா எது ?
   அ) கரகாட்டம் என்றால் என்ன ? ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும் ?
   இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை ?
6. அருந்துணை என்பதைப் பிரித்தால் ...........................
   அ) அருமை+துணை ஆ) அரு+துணை இ) அருமை+இணை ஈ) அரு+இணை
7. 'காலம் கரந்த பெயரெச்சம்' என்பது ....................
   அ) வினைத்தொகை ஆ) உம்மைத்தொகை இ) பண்புத்தொகை ஈ) அன்மொழித்தொகை
8. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கொண்டவர் ..................
   அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார் இ) தேவநேயப் பாவாணர் ஈ) இரா.இளங்குமரனார்
9. __காய்ந்த இலையும், காய்ந்த தோகையும்__ நிலத்துக்கு நல்ல உரங்கள் – இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடப்படுவது ......................
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்
10. பாடினாள் அருணா என்பது ..................
    அ) வினையெச்சத்தொடர் ஆ) பெயரெச்சத் தொடர் இ)விளித்தொடர் ஈ) வினைமுற்றுத்தொடர்
11. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப் போதார் கூறுகிறார்.
    அ) பெரிய கத்தி ஆ) இரும்பு ஈட்டி இ) உழைத்ததால் கிடைத்த ஊதியம் ஈ) வில்லும் அம்பும்
12. பாடலைப்படித்து வினாக்களுக்கு விடையளி

    சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
    உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
    நடுங்குசுவல் அசைத்து கையள், "கைய
    கொடுங்கோற் கோவலர் பின்நின்று உயித்தர

    இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் ................
    அ) காசிக்காண்டம் ஆ) மலைபடுகடாம் இ) முல்லைப்பாட்டு ஈ) பரிபாடல்
13. இப்பாடலில் ஆசிரியர்
    அ) நப்பூதனார் ஆ) கணிமேதாவியார் இ) பெருங்கௌசிகனார் ஈ) தமிழழகனார்



Scanned with OKEN Scanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

14. சுவல் என்பதன் பொருள் ..............
அ) சுவர் ஆ) மார்பு இ) தோல் ஈ) தோள்
15. இப்பாடலில் அமைந்துள்ள அடி எதுகைச் சொற்கள் ......................
அ) சிறுதாம்பு, உறுதுயர் ஆ) கொடுங்கோற், கோவலர் இ) இன்னே, வருகுவர் ஈ) நன்னர், நன்மொழி

## பகுதி – II (பிரிவு - 1)

**எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் (21 வது வினாவுக்குக் கட்டாயமாக விடையளிக்கவும்.** **4 X 2 = 8**

16. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
17. மொகு சாஸ்ட்டு என்பதன் பொருள் யாது ?
18. அ) தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.
ஆ) சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்து தம்பிப் பாவலர்.
19. மெய்க்கீர்த்தி பாடுவதன் நோக்கம் யாது ?
20. பொய்யோவெனும் இடையாளொடும் இளையானொடும் போனான் என்ற கம்பராமாயணப் பாடல் வரிகளில் பொய்யோ எனும் இடையாள், இளையான் என குறிப்பிடப்படுபவர் யாவர் ?
21. இன்மையின் எனத் தொடங்கும் திருக்குறளை அடி பிறழாமல் எழுதுக.

### (பிரிவு - 2)

**எவையேனும் 5 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5 X 2 = 10**

22. உண்பதூஉம் உடுப்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண் வற்றாகும் கீழ் – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகைகளைச்சுட்டி, அதன் இலக்கணம் தருக.
23. கலைச்சொல் அறிக. அ) Consonant ஆ) Humanism
**குறிப்பு : செவிமாற்றுத்திறனாளிக்கான மாற்று வினா. இருசொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**
அ) சிலை, சீலை ஆ) விடு, வீடு
24. கீழ்காணும் சொற்களின் கூட்டப் பெயர்களை எழுதுக.
கல், ஆடு கீரை, மக்கள்
25. தொடர்களை அடைப்புக்குறிக்குள் குறிப்பிட்டுள்ளவாறு மாற்றுக்.
அ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன், அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைபட்டது (தனிச்சொற்றொடர்களாக மாற்றுக)
ஆ) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினர். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவைச் சொற்றொடராக மாற்றுக)
26. ஊர் பெயர்களின் மரூஉவை எழுதுக.
அ) திருச்சிராப்பள்ளி ஆ) உதகமண்டலம்
27. மரபுத் தொடருக்கான பொருள் அறிந்து தொடரில் அமைத்து எழுதுக 27 .அ)மனக்கோடை ,ஆ)கண்ணுகருத்தும்
28. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்து கத்துவானே, தவிர கடித்த மாட்டான் " என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார். –இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.

## பகுதி – III (பிரிவு - 1)

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும்.** **2 X 3 = 6**

29. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.
தமிழர் போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமைக் குறிக்கிறது. போரின்கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது. தம்மை விட வலிமை குறைந்தவரோடு போர் செய்வது கூடாது. என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிக்கிறார்.
அ) யாருக்கெல்லாம் தீங்கு வராத வண்ணம் போர் புரிய வேண்டும் ?
ஆ) எத்தைகையரோடு போர் செய்யக்கூடாது என ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார் ?
இ) போர் அறம் என்பது யாது ?



Scanned with OKEN Scanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

30. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப்படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள் ?

31. மனிதனால் மாசடையும் நான் எனக் காற்று தன்னைக் கூறக் காரணம் என்ன ?

(பிரிவு - 2)

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும். (34வது வினாவுக்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)** 2 X 3 = 6

32. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன் ? விளக்கம் தருக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார் ?

34. அடிபிறழாமல் எழுதுக

'வாளால் அறுத்துச் சுடினும்' எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடல். (அல்லது)

'செம்பொ னடிச்சிறு' எனத் தொடங்கும் முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் பாடல்.

(பிரிவு - 3)

**எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்கவும்.** 2 X 3 = 6

35. கண்ணே கண்ணுறங்கு !
காலையில் நீயெழும்பு !
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு !
பாடினேன் தாலாட்டு !
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு ! – இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

36. கவிஞர் தாம் கூற விரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. பண்என்னாம் பாடற் கிளைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண் – அலகிட்டு வாய்ப்பாடு தருக.

பகுதி – IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5 X 5 = 25


38. அ) பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக. **(அல்லது)**

ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) புதிதாகத் திறன் பேசி வாங்கியிருக்கும் நண்பனுக்குத் திறன்பேசி பயன்பாடு குறித்து அறிவுரைகளைக் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக. **(அல்லது)**

ஆ) உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்ததைக் குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு முறையீட்டுக் கடிதம் ஒன்று எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. நாமக்கல் மாவட்டம், திருவள்ளுவர் நகரில் 25–ஆம் இலக்க வீட்டில் குடியிருக்கும் குகனின் மகன் தமிழன் அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறார். அவர் விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினராக சேர்ந்து கபடி விளையாட்டில் பயிற்சி பெற விரும்புகிறார். தேர்வர் தம்மைத் தமிழனாக் கருதி கொடுக்கப்பட்டுள்ள விளையாட்டு உறுப்பினர் சேர்க்கைப் படிவத்தை நிரப்புக.



Scanned with OKEN Scanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

42. அ) பள்ளியில் நான், வீட்டில் நான் – என்னும் தலைப்புகளில் நீங்கள் பள்ளியிலும் வீட்டிலும் நடந்து கொள்ளும் முறைகள் ஐந்தினைப் பட்டியலிடுக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்க

1) If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his - heart - **Nelson Mandela**

2) Language is the road map of culture. It tells you where its people come from and where they are going - **Rita mae Brown**

குறிப்பு : செவி மாற்றுத் திறனாளிக்கான மாற்று வினா. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

நம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முகமலர்ச்சியோடு வரவேற்று உண்ண உணவும் இருக்க இடமும் கொடுத்து அன்பு பாராட்டுவதே விருந்தோம்பல். விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர். உறவினர் வேறு விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். ஆதனால் தான் விருந்தே புதுமை என்று தொல்காப்பியர் அன்றே கூறியுள்ளார்.

i) விருந்தினர் என்போர் யாவர்

ii) விருந்து குறித்து தொல்காப்பியர் கூறியது யாது ?

iii) விருந்தினரை எவ்வாறு வரவேற்க வேண்டும்

iv) விருந்தினருக்கு என்னவெல்லாம் கொடுத்து அன்பு பாராட்ட வேண்டும் ?

v) யாரை விருந்தினர் என்று இக்காலத்தினர் கருதுகின்றனர் ?

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும். 3 X 8 = 24**

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேநீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா ? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா ? இக்கருத்துக்களை ஒட்டி 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக. **(அல்லது)**

ஆ) நிகழ்கலை வடிவங்கள் – அவை நிகழும் இடங்கள் – அவற்றின் ஒப்பனைகள் – சிறப்பும் பழமையும்– இத்தகைய மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள்–அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்ய வேண்டுவன – இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக.

44. அ) கற்கை நன்றே கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே என்கிறது வெற்றி வேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துக்களை விவரிக்க **(அல்லது)**

ஆ) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.

மாணவன் – கொக்கைப்போல, கோழியைப்போல–உப்பைப் போல – இருக்க வேண்டும்–கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும்–குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக் கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியா விட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி.

45. அ) குமரிக்கடல் முனையையும் வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில் சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவையாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப்புலவர்கள்.

இக்கருத்தைக் கருவாகக் கொண்டு சான்றோர் வளர்த்த தமிழ் என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக. **(அல்லது)**

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி அரசுப்பொருட்காட்சி என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை – பொருட்காட்சி நடைபெறும் இடம் – பல்வேறு அரங்குகள் –பலவிதமான வணிகம்– மக்கள் கூட்டம் – பாரம்பரிய நிகழ்கலைகள் – முடிவுரை.



Scanned with OKEN Scanner
Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com